THE EDUCATION CENTRE - AURORA
60 Wellington Street West, Aurora, Ontario L4G 3H2
தொலைபேசி: 905.722.3201 905.895.7216 905.727.3141 416.969.8131
தொலைநகல்: 905.727.1931
இணையத்தளம்: www.yrdsb.ca

# YRDSB மெய்நிகர் பாடசாலை மாற்றல் படிவம்

அன்பான குடும்பங்களே,
உங்கள் பிள்ளைகள் மார்ச் விடுமுறையை பாதுகாப்பாகவும் மகிழ்ச்சியாகவும் கழித்திருப்பார்கள் என்று நம்புகிறோம். அடுத்த கல்வியாண்டுக்காக நாங்கள் செயலூக்கமாகத் திட்டமிட்டு வருகிறோம், பெரும்பாலான மாணவர்கள் இப்போது நேரில் பாடசாலைக்குச் செல்லும்போது (நேருக்கு நேர்), சில குடும்பங்கள் தங்கள் பிள்ளை நிகழ்நிலை கற்றலைத் தொடர வேண்டும் என்று விரும்புவதை நாங்கள் அறிவோம். 2022-2023 கல்வியாண்டிலும் பாடசாலை நிர்வாகங்கள் மாணவர்களுக்கு மெய்நிகர் கற்றலைத் தொடர்ந்து வழங்க வேண்டும் என்று ஒன்ராறியோ அரசாங்கம் அண்மையில் அறிவித்தது. அதன்படி, 2022-2023 ஆம் கல்வியாண்டிலும் YRDSB ஆனது ஆரம்ப மெய்நிகர் பாடசாலை (EVS) மற்றும் இடைநிலை மெய்நிகர் பாடசாலை (SVS) மூலம் நேருக்கு நேர் (F2F) மற்றும் மெய்நிகர் கற்றலை வழங்குகிறது. எங்கள் திட்டங்களின்படி அடுத்த ஆண்டு கலப்பு முறை கற்றல் இல்லை.

அடுத்த ஆண்டு உங்கள் பிள்ளை நேரில் **(**நேருக்கு நேர்**)** பாடசாலைக்குச் சென்றால்**,** எந்த நடவடிக்கையும் தேவையில்லை.

உங்கள் பிள்ளை 2022-2023 கல்வியாண்டில் மெய்நிகர் பாடசாலையில் சேர விரும்பினால் அல்லது எங்கள் மெய்நிகர் பாடசாலைகளைப் பற்றிய மேலதிக தகவலைப் பெற விரும்பினால், மேலும் வாசிக்கவும்.

## ஆரம்ப மெய்நிகர் பாடசாலை

ஒன்லைனில் பாடசாலைக்கு சமூகமளிக்கும் மாணவர்களுக்காக:

- ஓய்வு (இடைவேளைகள்) மற்றும் மதிய உணவுக்கான நேரம் உட்பட வழக்கமான பாடசாலை நாளைத் தொடர்ந்து மாணவர்கள் ஒரு தினசரி அட்டவணையைப் பெறுவார்கள்.
- கற்றல் நடவடிக்கைகள் ஒன்டாரியோ பாடத்திட்டத்தைப் பின்பற்றி, சிறிய மற்றும் பெரிய குழுக் கற்றல் வாய்ப்புகள் போன்ற வழக்கமான வகுப்பறையை ஒத்த கற்பித்தல் முறைகளைப் பின்பற்றும், மாணவர்கள் தங்கள் ஆசிரியர் மற்றும் வகுப்புத் தோழர்களுடன் கற்றலில் ஈடுபடுவார்கள்.
- சிறுவர் பாடசாலை மாணவர்கள் ஒரு நாளைக்கு 300 நிமிட நிகழ்நேரத்தில் குறைந்தபட்சம் 180 நிமிடங்களாவது, ஆசிரியர் மற்றும் நியமிக்கப்பட்ட ஆரம்பக் சிறு பராயக் கல்வியாளருடன் (DECE) நேரடி (ஒத்திசைவு) கற்றலைப் பெறுவார்கள். மீதமுள்ள எந்த நேரமும் ஒத்திசைவற்ற (நேரடி அல்லாத) கற்றலாக இருக்கும்.
- **1-8** வரையான வகுப்பு மாணவர்கள் ஒரு நாளைக்கு 300 நிமிட நிகழ்நேரத்தில் குறைந்தபட்சம் 225 நிமிடங்களாவது ஒரு ஆசிரியருடன் நேரடி (ஒத்திசைவு)

THE EDUCATION CENTRE - AURORA
60 Wellington Street West, Aurora, Ontario L4G 3H2
தொலைபேசி: 905.722.3201 905.895.7216 905.727.3141 416.969.8131
தொலைநகல்: 905.727.1931
இணையத்தளம்: www.yrdsb.ca

கற்றலைப் பெறுவார்கள். மீதமுள்ள எந்த நேரமும் ஒத்திசைவற்ற (நேரடி அல்லாத) கற்றலாக இருக்கும்.

- மாணவர்/குடும்ப ஆர்வம் மற்றும் பதவியணி தேவைகளின் அடிப்படையில் முடிந்தால் 2022-2023 ஆம் ஆண்டில் பிரெஞ்சு இம்மர்சன் புரோகிரமிங் வழங்கப்படலாம். மாற்றல் முறை முடிவடையும் வரை, இந்த விருப்பத் திட்டம் வழங்கப்படும் என்று எங்களால் உத்தரவாதம் அளிக்க முடியாது பிரெஞ்ச் இம்மர்ஷன் மெய்நிகர் முறையில் கிடைக்காத பட்சத்தில், அடுத்த ஆண்டு (2023-2024) உங்கள் பிள்ளை நேருக்கு நேர் பிரெஞ்ச் இம்மர்ஷன் (FI) திட்டத்தில் மீண்டும் சேர முடியும்.
- இரண்டாம் மொழி (ESL) நிகழ்ச்சித் திட்டமாக ஆங்கிலம் தேவைப்படும் மாணவர்கள் ஆங்கில மொழி உதவிகளைப் பெறுவார்கள்.
- இரண்டு கற்றல் மாதிரிகளிலும் விசேட கல்வித் தேவைகள் கொண்ட மாணவர்களுக்கு உதவுவது முதன்மையானது. விசேட கல்விப் பதவி அணியினர்கள் இரு மாதிரிகளிலும் மாணவர்களுக்குத் தொடர்ந்து உதவுவார்கள். செப்டம்பரில், IEP களைக் கொண்ட மாணவர்களின் குடும்பங்கள் தங்கள் பிள்ளையின் IEP பற்றிய ஆலோசனைக்காக மெய்நிகர் பாடசாலையால் தொடர்பு கொள்ளப்படுவர். விசேட கல்விச் சமூக வகுப்புகளில் உள்ள மாணவர்களின் குடும்பங்கள், Google Classroom மற்றும் ஒன்லைன் சந்திப்பு விவரங்களுடன் அவர்களின் மெய்நிகர் பாடசாலை மூலம் தொடர்புகொள்ளப்படுவர்.

மேலதிக தகவலுக்கு, தயவசெய்து எங்கள் குடும்பங்களுக்கான மெய்நிகர் பாடசாலை அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளைப் பார்வையிடவும்.

## இரண்டாம் நிலை மெய்நிகர் பாடசாலை

- 9-12 வரையான வகுப்புகளில் உள்ள மாணவர்கள் இது நான்கு 75 நிமிட பாடவேளைகள் மற்றும் ஒரு பொதுவான மதிய உணவுக் கால அட்டவணையைத் தொடர்ந்து ஒரு தினசரி அட்டவணையைப் பெறுகிறார்கள்.
- ஒவ்வொரு 75 நிமிடப் பாடவேளையும் ஆகக் குறைந்தது 60 நிமிட நேரடி (ஒத்திசைவுக்) கற்றலைக் கொண்டிருக்கும்.
- கற்றல் நடவடிக்கைகள் ஒன்டாரியோ பாடத்திட்டத்தைப் பின்பற்றி, சிறிய மற்றும் பெரிய குழுக் கற்றல் வாய்ப்புகள் போன்ற வழக்கமான வகுப்பறையை ஒத்த கற்பித்தல் முறைகளைப் பின்பற்றும், மாணவர்கள் தங்கள் ஆசிரியர் மற்றும் வகுப்புத் தோழர்களுடன் கற்றலில் ஈடுபடுவார்கள்.
- 9-12 ஆம் வகுப்புகளில் இருந்து கட்டாயப் பாடநெறிகள் வழங்கப்படுகின்றன மற்றும் 9-12 ஆம் வகுப்புகளில் இருந்து மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான தேர்ந்தெடுக்கப்பட்ட பாடநெறிகள் கிடைக்கின்றன. எந்தவொரு பாடசாலையையும் போன்று, மாணவர் தேவை தற்போதைய

THE EDUCATION CENTRE - AURORA
60 Wellington Street West, Aurora, Ontario L4G 3H2
தொலைபேசி: 905.722.3201 905.895.7216 905.727.3141 416.969.8131
தொலைநகல்: 905.727.1931
இணையத்தளம்: www.yrdsb.ca

பாடத் திட்டமிடலில் செல்வாக்கு செலுத்துவதுடன், சில பாடநெறிகள் வழங்கப்படாமல் போகலாம் என்பதை முக்கியமாக கவனத்தில் கொள்ளவும். இரண்டாம் நிலை மெய்நிகர் பாடசாலை வழமையான பாடசாலை பஞ்சாங்க வருடத்தைக் கொண்ட பாடசாலைகளைப் போன்று அதே பாடநெறி திட்டமிடலயும் அட்டவணையையும் பின்பற்றும்.

- அட்வான்ஸ் பிளேஸ்மென்ட், இன்டர்நேஷனல் பேக்கலரேட், ARTS, SHSM, பிரெஞ்ச் இம்மர்ஷன் உள்ளிட்ட விருப்பத்திற்குரிய வசேட புரோகிரமிங்கள் கிடைக்காததால், குடும்பங்களும் மாணவர்களும் இரண்டாம் நிலை மெய்நிகர் பாடசாலை பாடநெறி பஞ்சாங்கத்தை மீளாய்வு செய்ய ஊக்குவிக்கப்படுகிறார்கள். அனைத்து விசேட கல்வி வகுப்புகளும் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை நடைபெறும்.
- இரண்டு கற்றல் மாதிரிகளிலும் விசேட கல்வித் தேவைகள் கொண்ட மாணவர்களுக்கு உதவுவது முதன்மையானது. விசேட கல்விப் பதவி அணியினர்கள் இரு மாதிரிகளிலும் மாணவர்களுக்குத் தொடர்ந்து உதவுவார்கள். செப்டம்பரில், IEP களைக் கொண்ட மாணவர்களின் குடும்பங்கள் தங்கள் பிள்ளையின் IEP பற்றிய ஆலோசனைக்காக மெய்நிகர் பாடசாலையால் தொடர்பு கொள்ளப்படுவர். விசேட கல்விச் சமூக வகுப்புகளில் உள்ள மாணவர்களின் குடும்பங்கள், Google Classroom மற்றும் ஒன்லைன் சந்திப்பு விவரங்களுடன் அவர்களின் மெய்நிகர் பாடசாலை மூலம் தொடர்புகொள்ளப்படுவர்.
- 9 - 12 ஆம் வகுப்புகளில் உள்ள மாணவர்கள், போர்டு லொகின் மூலம் அணுகப்பட்ட MyPathway Planner கணக்கு மூலம் பாடநெறித் தகவலை மேலும் அணுகலாம். அனைத்து பாடநெறிகளும் கிடைக்காது என்பதும், அனைத்து பாடநெறிகளும் அனைத்து காலகட்டங்களிலும் வழங்கப்படுவதில்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம், ஏனெனில் பாடநெறிகள் வழங்கப்படுவது மாணவர் தேவை உட்பட பல மாற்றங்களைப் பொறுத்தது.
- குறிப்பிட்ட பாடப்பிரிவுகள் தேவைப்படும் பிந்தைய இரண்டாம் நிலை விருப்பங்கள் தொடர்பான கேள்விகளைக் கொண்ட மாணவர்கள் மற்றும் குடும்பங்கள் தங்கள் தற்போதைய பாடசாலையின் வழிகாட்டல் பதவியணியினர்களைத் தொடர்பு கொள்ள ஊக்குவிக்கப்படுகிறார்கள். அனைத்து மாணவர்களும் வழிகாட்டல் பதவி அணியினர்களுடன் சந்திப்புகளை மேற்கொண்டு, எந்தவொரு பாடநெறித் தேர்வுக்கான கேள்விகளையும் கலந்துரையாடலாம்.
- அமைச்சினால் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளபடி, மெய்நிகர் பாடசாலைகளில் எடுக்கப்பட்ட பாடநெறிகள் பட்டப்படிப்புக்குத் தேவையான இரண்டு eLearning அலகுகளுக்குப் பயன்படுத்தப்பட முடியாது. இந்தத் தேவையைப் பற்றிய மேலதிக தகவல்கள் இந்த வசந்த காலத்தில் அனைத்து குடும்பங்களுக்கும் தெரிவிக்கப்படும்.
- இணைப் பாடத்திட்ட கழகங்கள் மற்றும் நிகழ்வுகள் நிகழ்நிலையில் வழங்கப்படும்.

THE EDUCATION CENTRE - AURORA
60 Wellington Street West, Aurora, Ontario L4G 3H2
தொலைபேசி: 905.722.3201 905.895.7216 905.727.3141 416.969.8131
தொலைநகல்: 905.727.1931
இணையத்தளம்: www.yrdsb.ca

- பல்கலைக்கழகம் அல்லது கல்லூரிக்கு விண்ணப்பிக்கும் பட்டதாரி மாணவர்கள் YRDSB இன் இரண்டாம் நிலை மெய்நிகர் பாடசாலை மூலம் அவ்வாறு செய்வார்கள் மற்றும் பாடசாலையின் பெயர் "YRDSB இரண்டாம் நிலை மெய்நிகர் பாடசாலை" என்று டிப்ளோமாவில் தோன்றும்.
- பட்டதாரி மாணவர்கள் இரண்டாம் நிலை மெய்நிகர் பாடசாலை பட்டப்படிப்பில் கலந்து கொள்ள முடியும்.

மேலதிக தகவலுக்கு, தயவசெய்து எங்கள் குடும்பங்களுக்கான மெய்நிகர் பாடசாலை அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளைப் பார்வையிடவும்.

## மெய்நிகர் பாடசாலை மாற்றல் படிவம்

மெய்நிகர் பாடசாலை மாற்றல் படிவம் 2022-2023 கல்வி ஆண்டு முழுவதும் ஆரம்ப அல்லது இடைநிலை மெய்நிகர் பாடசாலைக்கு மாற்ற விரும்பும் யோர்க் பிராந்திய மாவட்ட பாடசாலை சபை மாணவர்களுக்கானது. இந்தப் படிவம் பெற்றோர்/பாதுகாவலர்களால் பூர்த்தி செய்யும் நோக்கத்தில் உள்ளது மற்றும் YRDSB மெய்நிகர் பாடசாலைக்கு ஒரு மாற்றலைக் கோரும் ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒரு தனியான மாற்றல் படிவம் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இந்த மெய்நிகர் பாடசாலை மாற்றல் படிவத்தைச் சமர்ப்பிக்கும் முன் உங்கள் பிள்ளையுடன் தயவுசெய்து கலந்துரையாடவும்.

முடிவெடுக்கும் பொறுப்புகளைப் பகிர்ந்து கொண்ட குடும்பங்கள் இந்தப் படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன் ஒரு உடன்பாட்டுக்கு வர வேண்டும். கற்றல் மாதிரியைத் தேர்ந்தெடுக்கும்போது, மாணவர்கள் மற்றும் குடும்பங்கள் கல்வி ஆண்டு முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரியில் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க வேண்டும். இந்த நேரத்தில் இந்த முடிவை எடுப்பது குடும்பங்களுக்கு சவாலாக இருக்கலாம் என்பதை நாங்கள் அங்கீகரிக்கிறோம், இருப்பினும் பயனுள்ள மற்றும் ஆதரவான பாடசாலை நேர அட்டவணையை உருவாக்க இந்தத் தகவல் அவசியம்.

நீங்கள் உங்களுக்காக/உங்கள் பிள்ளைக்காக 2022-2023 கல்விஆண்டுக்கான ஆரம்ப அல்லது இடைநிலை மெய்நிகர் பள்ளியில் சேர விரும்பினால், பின்வரும் மெய்நிகர் பாடசாலை மாற்றல் படிவத்தைப் பூர்த்தி செய்யவும்.

முக்கியம்: மெய்நிகர் பாடசாலை மாற்றல் படிவம் மார்ச் 31 முதல் ஏப்ரல் 7 வரை திறந்திருக்கும்.

மெய்நிகர் பாடசாலை மாற்றல் படிவத்தைச் சமர்ப்பித்த பிறகு, 2022-2023 கல்வி ஆண்டுக்கான மெய்நிகர் கற்றலுக்காக மெய்நிகர் பாடசாலை மாற்றல் படிவத்தைச் சமர்ப்பித்துள்ளீர்கள் என்பதை உறுதிப்படுத்தும் மின்னஞ்சலை ஏப்ரல் 8க்குப் பிறகு பெறுவீர்கள். உங்கள் உறுதிப்படுத்தல் மின்னஞ்சலைப்

THE EDUCATION CENTRE - AURORA
60 Wellington Street West, Aurora, Ontario L4G 3H2
தொலைபேசி: 905.722.3201 905.895.7216 905.727.3141 416.969.8131
தொலைநகல்: 905.727.1931
இணையத்தளம்: www.yrdsb.ca

பெறும்போது ஒரு பிழையைக் கண்டால், உங்கள் பிள்ளையின் பாடசாலையைத் தொடர்பு கொள்ளவும்.

முக்கியம்: மிக அண்மைய சமர்ப்பிப்பு 2022-2023 கல்வி ஆண்டு முழுவதற்கும் உங்கள் இறுதி முடிவாகப் பயன்படுத்தப்படும்.

முக்கியம்: 2022-2023 கல்வி ஆண்டு முழுவதும் நேருக்கு நேர் கலந்துகொள்ள ஒரு மாணவர் எந்தச் சமர்ப்பிப்பையும் செய்யத் தேவையில்லை. பாடசாலைக்குத் திரும்புவது குறித்து குடும்பங்கள் பல கேள்விகளைக் கொண்டிருப்பதை நாங்கள் அறிவோம், மேலும் தகவல் கிடைக்கும்போது உங்களுடன் தொடர்ந்து பகிர்வோம், பின்வரும் எங்கள் இணையதளத்தில் தகவல், வீடியோக்கள் மற்றும் வளங்களைப் பகிர்வோம் www.yrdsb.ca/school-reopening.

**இந்தப் படிவத்தில் சேகரிக்கப்பட்ட தகவல்கள் R.S.O.1990, c E.2, s.8.1, கல்விச் சட்டத்தின் அதிகாரத்தின் கீழ் சேகரிக்கப்படுகிறது. மற்றும் எங்கள் பாடசாலைகளின் பொது நிர்வாகத்திற்காக யோர்க் பிராந்திய மாவட்ட பாடசாலை சபையினால் பயன்படுத்தப்படும். இந்தப் படிவத்தில் சேகரிக்கப்படும் அனைத்து தனிப்பட்ட தகவல்களும் மாநகர தகவல் சுதந்திரம் மற்றும் தனியுரிமைச் சட்டம், R.S.O., 1990, c M.56, s. ஆகியவற்றின் படி பேணப்படும். M.56, s. 29. இந்தப் படிவத்தில் உள்ள தகவல் சேகரிப்பு தொடர்பான ஏதேனும் கேள்விகள் இருந்தால் research.services@yrdsb.ca என்ற முகவரிக்கு அனுப்பப்படலாம்.